விலை சதம் 5

பக்கங்கள் 6

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகாரவகைகள், இங்கிலீஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமியாப்பிள்ளை & சன்ஸ்,
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

Telegrams: 'SUTANTIRAN', COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	„	12-00
1 வருடச் சந்தா	„	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194A, நட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு ஐப்பசி மீ 23உ ஞாயிற்றுக்கிழமை — Colombo, November 9 1947 ஹிஜிரி 1366 துல்ஹஜ் பிறை 25 | இதழ் 159

ஆங்சான் கொலைக்காரராம்?

பிரிட்டிஷ் பத்திரிகாசிரியர் வாய்த்துடுக்கு

சிறுபான்மையருக்காக முதலைக் கண்ணீர்

ரங்கூனில் தேசிய தின வைபவம்

"பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை விட்டு வெளியேற பர்மா தீர்மானித்தமை, நான் அறிந்த பர்மாவின் நண்பர்கள் ஒருவருக்கும் ஆனந்தத்தை அளிக்கவில்லை. அவர்கள் சிறுபான்மையரான காரென், கச்சின், சின், நாக, ஆங்கிலோ-பர்மிய, ஆங்கிலோ-இந்திய சமூகங்களில் சுதந்திரத்துக்கு இப்போ ஆபத்து எனப் பயப்படுகிறார்கள்'

மேற்கண்டவாறு லண்டன் டெயிலி மெயில் பத்திரிகாசிரியர் பிராங் ஓவன் எழுதுகிறார். அவர் மேலும் கூறுவதாவது:-

"நீண்ட காலமாக நாம் நடத்தி வந்த வன யுத்தங்களில்எல்லாம் இந்த சமூகங்களே நமது நண்பர்களாய்விளங்கின அடிக்கும் உதைக்கும் சித்திரவதைக்கும் ஆளாகி பட்டினியில் கிடந்து வாடிய போதும் இச்சமூகத்தினரில் ஒருவராவது நமக்குத் துரோகம் செய்ததில்லை."

கன்சர்வேடிவ் கட்சி சோஷியலிஸடுகள் அனுஷ்டித்துவரும் சாம்ராஜயக் கொள்கை சம்பந்தமாகச் சொல்லும்குறைகளைப் பற்றி பிரஸதாபித்து விட்டு மேலும் எழுதுவதன் சுருக்கமாவது:-

நிச்சயமான கொலைக் குற்றவாளியான ஆங்சானைத் தூக்கலிடாமல் சுமுகமாக நடத்த வேண்டும் என்று தீர்மானித்தது வின்ஸ்டன் சர்ச்சிலே அதற்குக் காரணம் பர்மாவில் இருந்த பிரிட்டிஷ் போர் வீரரின் உயிரைக் காப்பாற்றவதாகும். ஆகையினால்தான் ஆங்சான் தப்பினார். தப்பியதுடன் ஒரு மகத்தான தேசிய வீரராக மாறிவிட்டார்.

துப்பாக்கியில் கை வைத்த ஆங்சான் துப்பாக்கியாலேயே மாண்டார். அவர் ஒரு முரட்டு ஆசாமி. ஜீவித்திருந்தால் பெரும் முரடராக அவர் ஒரு காலத்தில் வளர்ந்திருக்கலாம்.

கன்சர்வேடிவ்கள் பர்மாவை சாம்ராஜயத்தில் இருந்து விலக விடாமல் தடுப்பதற்கு பர்மாவுக்கு பிரிட்டிஷ் துருப்புகள் போக வேண்டுமானால் ஐந்தடி விஷன் துருப்புகள் கூட போதாது என்றும் அவர் தெரிவிக்கிறார்.

"ஆறு மாதமே அரசியலில் இருப்பேன்"

பர்மா பிரதமர் பேச்சு

ரங்கூன், நவ. 7

பர்மாப் பிரதமர் தக்கின் நு இன்று 20 ஆயிரம் பேர் சமுகம் அளித்த தேசிய தினப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

நான் அரசியலிலிருந்து அதிகார மாற்றம் நடந்ததும் ஓதுங்கிவிடுவதற்கு விரும்பினேன். ஆனால் எனது சகாக்கள் என்னைத் தொடர்ந்து பதவி வகிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

காலஞ்சென்ற ஆங்சானுக்கு எனது கடமையை புரிவதற்காக சுதந்திரப் பிரகடனத்தின் பின்பும் ஆறு மாதம் பதவி வகிக்க நான் தீர்மானித்துள்ளேன்.

இடதுசாரிகளுக்கு வேண்டுகோள்

இடதுசாரிக் கட்சிகள் சம்பந்தமாக தக்கின் நு கூறியதாவது:-

"இடது சாரிகள் தம்முள் தாம் எதிர்த்துக் கொண்டோ ஒருவருக்கொருவர் எதிராகச் சதியாலோசனை செய்துகொண்டோ இருந்தால் வலதுசாரிகள் அவர்கள் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்வார்கள். எனவே சோஷியலிஸடுகள், கமியூனிஸடுகள், பொதுஜன தொண்டர் படையினர் எல்லோரும் ஒன்று சேர்ந்து செயல் புரிவார்களாக!"

பிரிட்டனுக்கும் பர்மாவுக்கும் ஏற்படடுள்ள சுதந்திர ஒப்பந்தம்பற்றி அவர் பின்வருமாறு தெரிவித்தார்:-

பர்மாவுக்கும் அதன் மக்களுக்கும் பாதகமான ஒரு சிறு வசனத்தைக் தானும் நீங்கள் இதில் காணமாடடீர்கள்.

"சுதந்திரம் என்னும் விலை உயர்ந்த பரிசிற்காக நாம் சில பிணைகளைக் கொடுக்கவேண்டி ஏற்பட்டது."

ரங்கூனில் தேசிய தினக் கொண்டாட்டம் மிக விமரிசையாக நடைபெற்றது.

சர்வதேச வர்த்தக மகா நாட்டுக்கு பர்மாப் பிரதிநிதி

பர்மாப் பொருளாதார மந்திரி ஊடின் டுட் விரைவில் நடக்கவிருக்கும் சர்வதேச வர்த்தக மகாநாட்டிற்கு அடுத்த வாரம் புறப்பட்டுச் செல்வார் என்று தெரிகிறது.

அவர் போகும் மார்க்கம் லண்டன், அமெரிக்கா மார்க்கமாகும். [ராய்ட்டர்]

யாழ்ப்பாணத்தில் கோழிகளுக்கு பிளேக் நோய்

பால் கட்டும் வேலை நடக்கிறது

யாழ்ப்பாணம், நவ 8

வருடாந்தம் யாழ்ப்பாணத்திலே கோழிகளுக்கு பிளேக் போன்ற நோய் வருவது வழக்கம். இம்முறை கோழிகள் இந்நோயால் அழிந்து போவதைத் தடுக்க யாழ்ப்பாணத்துள்ள உதவி பிளேக்கு நோய் வைத்தியர் திரு ஆலாலசுந்தரம் வட பகுதியில் பால் கட்டுதலை ஆரம்பித்திருந்தார். இது வரையில் சுமார் 9000 கோழிகளுக்கு பிளேக் வராது தடுக்கும் பால் கட்டப்பட்டுள்ளது.

"ரயில்வே கிளெரிகல்" உத்தியோகம்

29 தமிழர் வேலை பெறுவர்

கொழும்பு, நவ. 8

சென்ற ஜூன் மாதத்தில் நடைபெற்ற ரயில்வே கிளெரிகல் பரீட்சையில் சித்தியெய்தி உத்தியோகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட தமிழர்களின் பெயர்களாவன:-

1 டபிள்யூ. எஸ். சோமசுந்தரம், 2 வி. இரத்தினம், 3 ஆர். ஏ. இராசையா, 4 பி. குரைஷி பிள்ளை, 5 ஸி. பொன்னுராஜா, 6 எஸ் ஞானப்பிரகாசம், 7 ஜி ஸி. போல், 8 கே. வீரையா, 9 கே. ஜெயரத்தினம், 10 எஸ் சிங்கராயர், 11 பி. வாசலூன், 12 ஆர் நடேசன், 13 ஜே பீட்டர் போல், 14 எஸ் கதிரைமலைப் பிள்ளை, 15 பி. ஸ்ரீரங்க ராஜா 16 கே. பி. ஜி பெனடிக்ட், 17 எஸ். கந்தையா, 18 எஸ். டி. ஹரிச்சந்திரா, 19 எஸ். இராஜநாயகம், 20 கே செல்வத்தம்பு 21 ஸி. காராளபிள்ளை, 22 எல் எம். எப் ஜெயராஜா, 23 இன்னாசிப்பிள்ளை, 24 கே. சுப்பிரமணியம், 25 எஸ். தனபாலசிங்கம், 26 கே சபாரத்தினம் 27 எஸ் அன்னலிங்கம், 28 என் தர்மரத்தினம், 29 ஆர். குணநாயகம்.

எதிரிகளுக்கு பாகிஸ்தான் உதவியுண்டு

லண்டனிலுள்ள இந்திய ஹைகமிஷனர் அபிப்பிராயம்

லண்டன், நவ 7

பிரிட்டனிலுள்ள இந்திய ஹை கமிஷனராகிய திரு வி. கே. கிருஷ்ண மேனன் இன்று உலகப் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறினார்:-

"காஷ்மீருக்குள் புகுவதற்கு எதிரிகளுக்கு பாகிஸ்தான் அரசாங்கத்தின் அனுமதி இருந்திருக்கவேண்டும் அல்லது பாகிஸ்தான் அரசாங்கம் அவர்களை தடுக்க விரும்பாது விட்டது-அல்லது தடுப்பதற்கு அதிகாரமற்றிருந்திருக்கவேண்டும்.

"எதிரிகள் பாகிஸ்தானுக்கு ஊடாக உள்ள வழியால் அன்றி வேறு வழிகளால் போக முடியாது. எதிரிகள் சென்ற பாகிஸ்தான் வழிகளில் உள்ள பிரதேசங்களில் ஏராளமான பாகிஸ்தான் துருப்புகள் இருந்திருக்கின்றன.

தமிழ்க் கலாசாரம்பற்றி பேராசிரியர் பேச்சு

கொழும்பு, நவ 8

கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் கல்வி இலாகா டிபுடி டைரக்டர் திரு கே. எஸ். அருள்நந்தி தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் பேசுகையில் பேராசிரியர் திரு. மீனாட்சி சுந்தரம்பிள்ளையை சபையோருக்கு அறிமுகம் செய்து வைத்தார். பேராசிரியர் திரு. டி. பி. மீனாட்சி சுந்தரம்பிள்ளை "தமிழ்க் கலாசாரம்" எனும் விஷயம்பற்றி பேசுகையில் பழந் தமிழர் நாகரீகத்தொடர்புடைய விஷயங்களைக் குறிப்பிட்டு தொலகாப்பியம், திருக்குறள் முதலிய நூல்களை எடுத்து முக்கிய விஷயங்களை விளங்கவைத்து தமிழ்க் கலாச்சாரத்தை அந்நூலகள் தெளிவாக எடுத்துக் காட்டுவதைக் கூறினார். தலைவர் முடிவுரைக்குப் பின் தேவாரபாராயணத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

"சுதந்திர பட்டணம்"

பாரிஸ், நவ. 8

இந்தியாவிலுள்ள ஐந்து பிரெஞ்சு மாகாணங்களில், கல்கத்தாவிற்குச் சமீபமாகவுள்ள சந்திரநாகர் என்னும் மாகாணம், இன்று காலையில் வெளிவந்தபிரெஞ்சு அரசாங்கப்பத்திரிகையாகிய "ஜோர்னல் ஒவ்விஷேல்" வெளியீட்டில் "சுதந்திர பட்டணம்" எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அப் பிரகடனத்தில், அப்பட்டணத்தின் நிர்வாகம், நிதி முதலியன முனிசிபல் அசெம்பிளியால் நடாத்தப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இம் முனிசிபல் சபை 25 அங்கத்தினர்களைக் கொண்டதாக இருக்கும். அவ்வங்கத்தவர்கள் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருப்பர்.

நிர்வாகம், நிதி அல்லாத விஷயங்கள் பிரெஞ்சு நிர்வாகக் கவுன்ஸில் ஒன்றால் நடத்தப்பெறும். அக் கவுன்ஸிலில் அரசாங்கப் பிரதிநிதியும், பிரெஞ்சு இந்திய ஸ்தாபனங்களின் தலைவர்களால் நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவரும் கொண்டதாக இருக்கும்.

சந்திரநாகரின் குடிஜனத் தொகை 38,284 ஆகும். புதுவைக்கு அடுத்த பிரெஞ்சு இந்திய மாகாணம் இதுதான்.

வர்த்தக மந்திரியின் அந்தரங்க காரியதரிசி

திரு. பி. ஆர். தேவராஜன் நியமனம்

இலங்கை "சிவில் சர்வீஸி"லுள்ள திரு. பி. ஆர் தேவராஜன் அவர்கள் வர்த்தக மந்திரியின் அந்தரங்க காரியதரிசியாக இம்மாதம் முதலாம் தேதி தொடக்கம் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

வியட்நாம் துருப்புகள் பிரயாணிகள் ரயிலை தாக்கினர்

17 பேர் கொல்லப்பட்டனர்; 15 பேருக்குக் காயம்

சைகோன், நவ 8

கொச்சின் சமஸதானத்திலுள்ள டான்ஹிஸப் என்னுமிடத்திற்குச் சமீபத்தில் சைகோன்-மைத்ஹோ ரயிலை இந்தோ சீன தேசிய வாதிகள் தாக்கியதால் 17 பிரயாணிகள் கொல்லப்பட்டும் 15 பிரயாணிகள் காயமடைந்தும் உள்ளனர் என பிரஞ்சு ராணுவ அறிக்கையொன்று கூறுகின்றது.

(ராய்ட்டர்)

அமெரிக்க ஸ்தானிகர் வாஷிங்டன் திரும்புவார்

லண்டன், நவ 8

லண்டனிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் லேவிஸ் [illegible] விமான மூலம் இன்று வாஷிங்டன் புறப்படுவார். அங்கு 10-ம் தேதி நடக்கவிருக்கும் முக்கிய கூட்டங்களில் கலந்து கொள்ளவே அவர் செல்வதாகக் கூறப்படுகிறது.

பாலைதீன்

சர்வதேச யூத ராணுவம்

நிறுவப்படலாம் என பிரஸதாபம்

பிரிவினைக் கமிட்டியில் ஸ்தம்பிப்பு

பாரிஸ் நவ 7

சர்வதேசத்திலிருந்து சேகரிக்கப்பட்ட ஒரு லட்சம் யூத தொண்டர் படையை நிறுவும் திட்டமொன்றை பழைய பிரிட்டிஷ் ராணுவ உத்தியோகஸதரும் தற்போது ஹீபுருப் படையின் தலைவராய் விளங்குபவருமான திரு சாமுவல்வீஸர் இங்கு வெளியிட்டார்.

இப்போது பிரிட்டனில் உள்ள ஹீபுருப் படையில் 5000 பேர் இருப்பதாகவும், பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் யூத ராணுவத் தினர் 10 லடசம் இருப்பதாகவும் அவர்களில் பலர் சேர்க்கப் படுவதோடு இதர யூதர்களும் சர்வ தேச யூத ராணுவத்தில் சேர்க்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இது பற்றி பிரிட்டிஷ் யுத்த காரியாலயம், விசேஷ யுத்தப் படையை நிறுவுவதுதற்பொருட்டு பெறக்கூடிய தல்லவென்றும், ஆனால் பிரிட்டிஷ் படையில் சேர விரும்பும் யூதர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளதாக திரு வீஸர் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் யுத்தக் காரியாலயத்தினரோ இத்தகைய திட்டமதை பற்றியும் தமக்கு ஒன்றுமே தெரியாது என்று கூறிவிட்டார்கள்.

இந்த சர்வ தேச ராணுவம் பாலஸ்தீனில் இருந்து வாபஸ் பெற இருக்கும் பிரிட்டிஷ் ராணுவத்தின் இடக்கை எடுக்கும் என்று திரு வீஸரால் கூறப்பட்டது.

லேக்சக்ஸஸ் (நியூயார்க்) நவ. 8

அமெரிக்கா பாலஸதீன் சம்பந்தமாகக் கொண்டுவந்துள்ள திட்டத்தை நிறைவேற்றி வைப்பதில் பிரிட்டன் எவ்வளவு தூரம் ஒத்துழைக்கும் என்று அமெரிக்கா பிரிட்டனை விசாரித்துள்ளது. இது நிற்க, பாலஸதீன் பிரிவினை உப கமிட்டியில் அமெரிக்கத திட்டத்தினாலும் ரஷியத் திட்டத்தினாலும் ஏற்பட்டிருக்கும் ஸதம்பித நிலைமை இன்னும் உடைந்தபாடில்லை.

400 யூதர் கைது

அல்ஜியெர்ஸ், நவ. 7

சட்டவிரோதமாக பாலஸதீன் செல்லப் புறப்பட்டதாகக் கருதப்படும் 400 யூதர்கள் அல்ஜியெர்ஸிற்குச் சமீபம் கப்பலில் ஏற்றத தயாரானபோது கைது செய்யப்பட்டார்கள்.

கிரீஸில் கொரில்லாப் போர்

ஏதென்ஸ், நவ. 7

அமெரிக்கா கிரீஸில் ஒரு 'தேசிய காவலாட் படையை" நிறுவி உள்ளது. அதில் 20 ஆயிரம் பேர் அங்கம் வகிப்பார்கள் என்றும் அவர்களது உடை, துப்பாக்கி, வெடி மருந்து, உணவுச்செலவுகளை அமெரிக்கா ஏற்கும் என்றும் தெரிகிறது. இப்படை நிறுவும் நோக்கம் முடியரசுக்கெதிரான தேச பக்தர் கொரில்லாப்படைகளை துவம்சம் செய்வதாகும்.

(ராய்ட்டர்)

கொழும்பிலே குடியிருப்பு பிரச்னை

வீடுகளை அதிகரித்து, வாடகையைக் குறைப்பதற்கு கிளர்ச்சி ஆரம்பம்

பரிகாரம் கிட்டாவிட்டால் "நேரடி நடவடிக்கையாம்"

கொழும்பு, நவ. 8

கொழும்பில் பொது மக்களுக்கு அதிக கஷ்டத்தைத் தந்து கொண்டிருக்கும் குடியிருப்புப் பிரச்னை சம்பந்தமாக கொழும்பு நகர முக்கியஸதர்பலர் அடங்கிய கூட்டம் ஒன்று பொரளை, கொட்டா ரோட் 85-ம் நம்பர் கட்டிடத்தில் திரு பீட்டர் கெனமன் முயற்சியால் நேற்று கூட்டப்பட்டது இக் கூட்டத்திற்கு நகர சபை அங்கத்தினர்கள் டாக்டர் குமாரசூரியத்தினம், டாக்டர் கே நாகரதனம், எம் ஜி மெண்டிஸ, டபிள்யூ. ஏ. சுகததாஸ, பி. ஜீவேந்திரசிங்க, டொரிக் டி குசா, டி. ருத்ரா, ஜே எம் ஞானப்பிரகாசம் முதலியோரும் இலங்கைத் தொழிற் சங்க கான்பெடரேஷன், கமியூனிஸ்ட் கட்சி, போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகளும் சமுகமளித்தனர். திரு. கெனமன தலைமைவகித்தார்.

கொழும்பில் 10 ஆயிரம் குடும்பங்கள் வசிப்பதற்கேற்ற ஒரு வீடமைக்கும் திட்டத்தை அரசாங்கம், முனிசிபாலிட்டி ஆகியன உடனே ஆரம்பிக்க வேண்டும் என்று தீவிர கிளர்ச்சி ஆரம்பிப்பதென்று இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இது சம்பந்தமாக கட்டிடச் சாமான்களின் விலையையும் விநியோகத்தையும் கட்டுப்படுத்துவதோடு அநாவசிய கட்டடங்களை அனுமதிக்கக்கூடாதென்றும் கோரப்பட்டது. ஒரு மனிதன் வாழ்வதற்கு எவ்வளவு பிரதேசம் வேண்டும் என்பதையும் அரசாங்கம் கட்டுப்படுத்தி நிர்ணயிக்கவேண்டுமென்று கேட்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஒரு வீடமைக்கும் குடியிருப்புத் திட்டத்தைத் தயார் செய்து அரசாங்கத்துக்கும் பொதுஜனங்களுக்கும் சமர்ப்பிக்க ஒரு உப கமிட்டி நிறுவப்பட்டது.

கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

1. 1941 வாடகை விதிதங்களை அமுல் நடத்துவதோடு காணிச் சொந்தக்காரர் விட்டில் உள்ள பழுதுகளைப் பார்க்கும்படி செய்யவேண்டும்; அதிக வாடகை வசூலிப்பதை சாத்தியமற்றதாக்க வேண்டும்; வாடகை ரசீது கொடுக்காமலிருப்பதை கிரிமினல் குற்றமாக்க வேண்டும்; எழுத்து மூலம் காணிச் சொந்தக்காரன் வாடகை இவ்வளவு என்று எழுதிக் கொடுக்க வேண்டும்.

2. சொற்ப காணி வைத்திருப்பவர்கள் மீதுள்ள வரிப்பளுவைக் குறைப்பதற்காக வரி விகிதத்தை அதிக காணி வைத்திருப்பவர்களுக்கு அதிக வீதமாகவும், சிறு காணிச் சொந்தக்காரர்களுக்கு குறைந்த வீதமாகவும் தராதரத்தை அனுசரித்து நிர்ணயிக்கும் புதிய சொத்து வரி விதிதம் உருவாக்கப்படவேண்டும்.

நகரம் விழுவதும் வாடகை செலுத்துவோர் சங்கங்கள் நிறுவி இது சம்பந்தமாக கிளர்ச்சிசெய்ய வேண்டும் என்றும், பரிகாரம் கிட்டாத பட்சத்தில் வெறுமனே கிடக்கும் கட்டிடப் பகுதிகளில் பொது மக்கள் குடிபேறி சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும் என்றும், அவசியமானால் வேறு தகுந்த நடவடிக்கைகள் இது சம்பந்தமாக எடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நவம்பர் 23-ம்தேதி வாழைத்தோட்ட மைதானத்தில் இக் கிளர்ச்சியின் முதலாவது பொதுக் கூட்டம் நடக்கும்.

கை கால் ஒடிந்த துர்ப்பாக்கியர்கள்

"மனிதர்போல் நடத்தப்படவில்லை"

ஆங்கிலோ-அமெரிக்கர் மீது உக்ரைன் புகார்

லேக்ஸக்ஸஸ், நவ. 7

ஜெர்மனியில் மேற்குப் பகுதியில் ஆட்சி செலுத்தும் அமெரிக்க பிரிட்டிஷ் அதிகாரிகள் கை கால் ஒடிந்திருக்கும் துர்ப்பாக்கிய மனிதர்களை சுதந்திரம் உள்ள மனிதர்கள்போல் எண்ணாது, ஏதோ உயிரற்ற ஜடவஸதுக்கள் போல கருதி நடப்பதாகஉக்ரைனிய பிரதிநிதியால் குற்றம் சாட்டப்பட்டது.

அதற்குப் பதிலளித்த பிரிட்டிஷ் பிரதிநிதி மேற்படி குற்றச் சாட்டுகள் தப்பானவை என்று குறிப்பிட்டார். "இது உண்மையானால் உக்ரைனிய பிரதிநிதி பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு ஒழுங்கு முறையோடு அறிவித்திருக்க வேண்டும். ஆனால் அப்படி அறிவிக்கப்படவில்லை" என்று அவர் கூறினார்.

(ராய்ட்டர்)

அரிசி கடத்தியதாக வழக்கு

எதிரிக்கு ரூ. 4500 பிணை

மாத்தறை, நவ. 8

மாத்தறைப் பகுதியில் கட்டுவா என்னுமிடத்திலிருந்து ஒரு இரவு 331 கொத்து அரிசி வள்ளத்தில் கடத்தி வருகையில் போலிஸ கோஷடி கண்டு பிடித்ததும், அதில் ஒரு சார்ஜண்ட தாக்கப்பட்டதும் அரிசி கடத்திய மூவரில் இருவர் கைது செய்யப்பட்டு தலா ரூ. 2000 பிணையில் விடப்பட்டதும் முன்னவளி வந்துள்ளது.

போலிசாரிடம் அகப்படாது தப்பிச் சென்ற காமிஸ என்பவர் கோர்டில் ஆஜராகி தாம் குற்றவாளியல்லவென்று தெரிவித்தார். நீதிபதி எதிரியை ரூ. 4500 பிணையில் போகுமாறு விடுத்து வழக்கு விசாரணையை ஒத்தி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, நட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வதிக்கு ஒரு ஐப்பசி மீ 23உ
ஞாயிற்றுக்கிழமை

போலி வேஷத்தால் பயனில்லை

தமிழன் என்று ஒரு இனமுண்டு. தனியே அதற்கு ஒரு திறமுமுண்டு. அத்திறம் முன்னாளில் தலை சிறந்து விளங்கிற்று. இன்று அப்படியில்லை. அடிமைப் புத்திதான் தலை சிறந்து விளங்குகிறது. கைகட்டி, வாய் பொதுகி, தலை குனிந்து நிற்பதைத்தான் தமிழன தன் திறமாக எண்ணுகின்றான் போலத் தோன்றுகின்றது. சுகாதார ஸ்தலஸ்தாபன மந்திரி திரு பண்டாரநாயக்காவின் யாழ்பாண விஜயத்தின் போது நடந்த சம்பவங்கள் இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

திரு பண்டாரநாயக்கா சிங்கள இராஜ்யத்தை இலங்கையில் நிலைநாட்டக் கனவுகாணும் ஒருவர். இதற்கு உதவியாக சிங்கள மக்களிடையே, தமிழர் மீது ஆத்திரத்தைத் தூண்டுவதற்கு "சிங்கள பலய" என்றொரு பத்திரிகை மூலம் பிரசாரஞ் செய்விப்பவர். அப் பத்திரிகையில் வெளிவரும் துவேஷ பிரசாரங்களை நாம் "சுதந்திரனில்" பல தடவைகளிலும் வெளியிட்டிருக்கிறோம். வாசகர்கள் வாசித்திருப்பார்கள். சென்ற முதலாம் தேதியன்று யாழ்ப்பாணத்தில் திரு. பண்டாரநாயக்கா, யாழ்ப்பாணத்தின் எதிர்காலம் நன்மையையிட்டு சிங்களவரும் தமிழரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று அழகாகக் கூறியுள்ளார் ஆனால் அதே தேதியன்று கொழும்பில் வெளிவந்த "சிங்கள பலய" தலையங்கத்தை வாசியுங்கள். "எக்காரணம் கொண்டும் யாழ்ப்பாணத் தமிழகளோடு ஒத்துழைப்பது அவர்களை அண்டவிடுவது புத்திசாலித்தனமான செய்கையல்ல சிங்களவரின் ஜன்ம விரோதிகள் தமிழர்களே" என்பதுதான் அப்பத்திரிகை செய்யும் துவேஷப் பிரசாரம். இப்பொழுது விளங்குகிறதா திரு பண்டாரநாயக்காவின் ஒற்றுமைப் பிரசாரம் எந்த அளவில் இருக்கின்றதென்பது?

திரு. பண்டாரநாயக்கா ஒரு சந்தர்ப்ப வாதி. எதையும் சொல்லுவார். சிங்கள இராஜ்யம் ஸ்தாபிப்பதற்காக எதையும் செய்வார் இதற்காக தாய் கொண்டமதத்தையே மாற்றத் தயங்காதவர். இந்த மாதிரியான வகுப்பு வாதிக்கு என்ன செய்கிறார்கள் யாழ்ப்பாணத்திலுள்ள ஐந்தாம்படைத் தமிழர்சிலர். "கொழும்பில் செய்வதென்ன, இங்கு பேசுவதென்ன?" என்று ஏதாவது கேட்டார்களா? இல்லவே இல்லை. வரவேற்பு, விருந்துசாரம், மலர்மாலை சூட்டுதல் எல்லாம் செய்தார்கள். மந்திரியின் கிருபா கடாக்ஷம் இருந்தால் இந்த ஐந்தாம்படையினர் தங்கள் சுயநலங்களைப் பூர்த்தி செய்துகொள்ளலாமல்லவா? ஆனால் அதற்காக தமிழ்மக்களையும் அடிமையாக்க விரும்புகிறார்களா என்பதையே நாம் கேட்கிறோம்?

இத்தகைய போலி வேஷங்களால் திரு பண்டாரநாயக்காவுக்காவது அல்லது ஐந்தாம்படைத் தமிழருக்காவது எவ்விதநன்மையுமில்லை நாய் வேஷமிட்டு ஒருவர் குரைக்கலாம் ஆனால் உண்மையில் நாயாக விருக்கமுடியாது. தமிழ் மக்கள் இப்படிகளினின்றும் தப்பித்துக்கொள்ள வேண்டும்.

மலர் மாலை முதலியன இட்டு உபசரிக்கும் வழக்கத்தை அந்நியர் பரப்பியவர்கள் ஆங்கிலேயர்தான். அவர்கள் வெளியேறும் காலம் அண்மித்துவிட்டது. மீண்டும் அவர்கள் விதைத்த அடிமைப் புத்தியை நீரூற்றி வளர்ப்பது புத்திமான தலை தமிழ் மக்கள் ஆண்மையுடன் வாழவேண்டும். உண்மைத் தலைவர்களைத்தான் கௌரவிக்க வேண்டும்.

கொழும்பு காட்சி சாலையில் புதிய பொருட்கள்

அக்டோபரில் 10,400 பேர் விஜயம் செய்தனர்

கொழும்பு, நவ. 8

கொழும்பு பொருட் காட்சிசாலை அதிகாரிகள் வெளிடுத்துள்ள அறிக்கையொன்றில் அக்டோபர் மாதத்தில் 10,400 பேர் காட்சி சாலைக்கு விஜயம் செய்துள்ளனர் என்றும் இவர்களில் 1598 பேர் பள்ளிப் பிள்ளைகள் என்றும் கூறப்பட்டுள்ளது. 1813-ம் வருடத்தில் போலிஸ் விதானைகளுக்கு கவர்னர் பிரவுண்ரிக்பரிசு கொடுத்த இரு வெள்ளிப் பதக்கங்களை இந்த அக்டோபர் மாதத்தில் பிரதம காரியதரிசி காட்சிசாலைக்குக் கொடுத்துள்ளார் துறைமுக பிரதம அதிகாரி சமீபத்த முதல் மகா யுத்தத்தில் (1914-1918) ஜெர்மனி உபயோகித்ததென்று கூறப்படும் ஓர் கடற் சுரங்கத்தைக் காட்சிசாலைக்கு அளித்துள்ளார் அதோடு முதல் யுத்தத்தில் பாவிக்கப்பட்ட இயந்திர துப்பாக்கி யொன்றையும் அவர் கொடுத்துள்ளார் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது அக்டோபர் மாதத்தில் வேறும் பல புதிய பொருட்கள், காட்சிசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனவென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரத்தினபுரியில் தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

ரத்தினபுரி, நவ. 6

ரத்தினபுரியில பாமகார்டன் எஸ்டேட்டிலுள்ள சுமார் 700 சிங்கள தமிழ் தொழிலாளர் கடந்த ஐந்து நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். எஸ்டேட்டிலே சமசமாஜி கட்சி வேலைகளைச் செய்ததாக எஸ்டேட்டை விட்டு வெளியேறும்படி 3 போர்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டதாவும் அது காரணமாகவே வேலை நிறுத்தம் நடப்பதாகவும் கூறப்படுகிறது.

கல்கடுவா பகுதியில் நடந்த கூட்டத்தில் தொழிலாளர் வேலைநிறுத்தத்தை தொடர்ந்து நடத்தவேண்டுமென்றும் அவர்கள் கோரிக்கைமுற்றுப்பெறும் வரை ஒற்றுமையாக வேலை நிறுத்தம் நடக்கவேண்டுமென்றும் டாக்டர் என். எம். பெரேராவும் திரு. டி. எல். ஹெட்டியாராச்சியும்கூறினர். அத்தோடு ரத்தினபுரியில் சுமார் 3000 இலங்கை இந்தியன் காங்கிரஸ தொழிலாளர் கூட்டத்தில் திரு. கே. ராஜலிங்கம் பேசுகையில் தொழிலாளருக்கு தாங்கள் உதவ புரிவதாகவும் கோரிக்கை கிடைக்கும்வரை போராடவேண்டுமென்றும் மற்ற எஸ்டேட்டுகளிலுள்ளவர்களும் அநுதாப வேலைநிறுத்தம் செய்யக் கூடுமென்றும் அவர் தெரிவித்தார்.

செக்குகளில் கள்ளக் கையெழுத்திட்டார்

எதிரிக்கு அபராதம்

கொழும்பு, நவ. 8

திம்பிரிகசாயாவிலேயுள்ள எல். ஈ பெரேரா என்பவர் இரு வங்கி நோட்டுகளில் கள்ளக் கையொப்பம் இட்டுக் கொடுத்து பம்பலப்பிட்டியில் இருவரை ஏமாற்றியதாக குற்றஞ் சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கில் கொழும்பு தெற்த மாஜிஸ்டிரேட் திரு குணவர்தனு எதிரிக்கு ரூ. 80 அபராதம் விதித்தார்.

தொழிலாளர் கூட்டம்

கொழும்பு, நவ 8

கொழும்பு காம்பல் பிளேஸ் மைதானத்தில் அவிசாவளைத் தொகுதி பாராளுமன்ற அங்கத்தவர் திரு. பிலிப் குணவர்தனு தலைமையில் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள தொழிலாளர்கள் அடங்கிய கூட்டமொன்று நடைபெற்றது. 1917-ம் வருடத்தில் நவம்பர் 7-ம் தேதி ரஷியாவில் நடந்த புரட்சி ஞாபகார்த்தமாக இக் கூட்டம் நடைபெற்றது. இந்த 31-வது வருடாந்த கூட்டத்தில் தொழிலாளர் உட்பட பலர் பேசினார்கள்.

அரசியல் அடிவானத்திலே!

"காண்டீபன்"

பதின்மூன்று என்ற இலக்கம் மேல் நாட்டு சம்பிரதாயத்தின் படி ஓர் துர்ப்பாக்கியமான இலக்கம். இயேசுக் கிறிஸ்து நாதர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னம் அவர் போஜனம் செய்த போது பதின்மூன்று பேர் கூடி இருந்து போஜனம் அருந்தினராம்! அதுதான் அவருடைய கடைசி யான போஜனமாகும். ஆகவே பதின்மூன்று என்ற இலக்கம் ஒரு துர்லபமான இலக்கமாகக் கருதப்பட்டுவருகிறது. மேல் நாட்டில் மாத்திரம் அல்ல; கீழ்நாட்டிலும் அந்த மூட நம்பிக்கை புகுந்துவிட்டது. மூட நம்பிக்கையென்ற மட்டில் நின்றால் போதும்; அதுதான் இல்லை! பதின்மூன்று என்ற இலக்கம் பட்ட விஷயங்கள் எங்கள் சேனநாயக்கா மந்திரிமார் குழுவைக்கூட பஞ்சு படாப்பாடெல்லாம் பட வைக்கிறதே!

யார் யார் பாராளுமன்றத்திற்கு அங்கத்தவராகவரலாகாதவை யற்றவர் என்று நியமித்த சட்டத்தின் பிரிவிற்கு அந்த இழவு விழுந்த குடியேற்ற நாட்டுக் காரியாலயம் பதினமூன்றும் இலக்கத்தைப் போட்டுவிட்டார்களே. எங்கள் முடிசூடா மன்னன் சேனநாயக்கா தலையைச் சாய்க்கு ஒரு விநாடி நேரம் தூங்கவழியில்லையே. மண்டை வெடித்துத் திரிகிறாரே மனுஷன்.

அந்தச் சட்டத்திலே ஒரு வசனம் யூ என். பி.க்காரர் 28 பேரை ஒரே யடியில் யோக்யதை யற்றவர்களாக்கிப் போடும் என்றார்கள். சட்ட நிபுணர்கள். பாவம்! உடனே தந்திக்குமேல் தந்தியாக அடித்து திரு சேனநாயக்கா அந்தச் சட்டத்திலே திருத்தம் செய்து பாடசாலை மானேஜர்மார் 28 பேரை தகுதியுடையவர்களாகச் செய்தார். அந்தக் குறும்புக் குணம் படைத்த பத்திரிகையொன்று அந்தச் செய்கையைத் தம்பட்டம் தட்டிக் காட்டி அம்பலத்திற்குக் கொண்டு வந்தது.

அப்புறம் தேர்தலிலே சரியீனமான செய்கைகளைச் செய்தவர்களை அந்தச் சட்டத்திலே வேறு ஒரு உட்பகுதியோகயதையற்றவராக்கிற்று. திரும்பவும் குடியேற்றநாட்டு மந்திரியாரைத் தொழுது தெண்டனிட்டு ஒரு திருத்தம் செய்வித்து யூ. என். பி யிலே யிருக்கும் சரியீனமான செய்கைசெய்தவர்கள் சலரைச் சபைக்கேற்ற வழி வைத்தார். இதையும் தமபட்டம் தட்டுகிறவர்கள் அம்பலத்திற்குக் கொண்டு வந்தார்கள் மனுஷன் சேனநாயக்காவை சொற்பம் மனம் ஆறவிட்டால் தானே.

இடதுசாரிக் கட்சிக்காரர்கள் இருக்கிறார்களே. அவர்கட்குள் அநேகர் சிறைவாசம் என்ற பொருளிலே அடிக்கடி சிக்குகிறவர்கள். ஆகவே அவர்களில் ஒரு சிலரை இந்தப் பதின்மூன்றும் பிரிவுச் சட்டத்தில் ஒரு உட்பிரிவு வலை வீசி பாராளுமன்றத்திற்கு உட்புகாமல் தடைசெய்தது. அவர்கள் எல்லாரும் திரண்டுகொண்டு நாங்களும் பாராளுமன்றம் புகுவதற்கு வசதியாக இந்தச் சட்டத்தைத் திருத்துவி என்று சேனநாயக்காவைப் பிடித்தார்கள்; கூக்குரலிட்டார்கள். உறுமினார்கள். கொழும்பு நகரதலை காலிமுகமைதானத்தில் நின்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இங்கிலாந்தில் இருக்கும் தங்கள் நண்பர்களையும் தோழர்களையும் கொண்டு கேள்விகள் கிழப்பினார்கள். ஆனால் அவர்கள் கேட்டபடி சட்டத்தைத் திருத்தி யமைக்க முற்பேனால் யூ என். பி-க்குத்தானே நஷ்டம். எதிரிகள் கூடுதலினால் வேறு என்ன பயன் கிடைக்கும். ஆனபடியால் சட்டங்களை அடிக்கடி திருத்துவதும் பாராளுமன்றம் தீர்மானிக்க முன்னம் குடியேற்ற நாட்டுக் காரியாலயத்தைக் கொண்டு திருத்திவிப்பதும் கூடாது என்ற சாட்டை தரங்குப்பிடியாகப் பிடித்தார். அதன்படியே சட்டம் திருத்தப்படவில்லை. ஆனால் வோட்டுப் பிடிக்கிற தேர்தல் சமயத்தில் இடதுசாரிகள் இந்த செயலை அநியாயச் செயல் என்று ஓலமிட்டனர். சேனநாயக்காவுக்கு அதன் பிரகாரம் எவ்வளவு சேதம் தேர்தலில் கிடைத்தது என்று இன்னும் மதிப்பெடுத்து முடியவில்லை.

போனது போகட்டும். இனியாகுதல் இந்தப் பதின்மூன்றும் பிரிவினால் இடர் இல்லையென்றிருக்கக கிடைக்கவில்லை. தேர்தல் போட்டிக்கு மனுப் போட்ட தினத்தன்று கண்டித் தொகுதியிலே யாரோ ஒருவர் இந்தப் பதின்மூன்றும் பிரிவின்படி மந்திரியாராக இருந்து ரூபாய் ஆயிரத்தைந்நூறு சம்பளம் பெற்றவர்கள் பிரதிநிதியாக வரமுடியாது என்று ஆக்ஷேபித்தாராம். ஆகவே கிறதாம். கிரகசாரம் இருந்தால் கிடைக்கும்தானே. வயசு அறுபத்திரண்டென்றாலும்கிரகசாரம் அல்லவோ இருக்க வேணும். உல்லாச வாழ்வு, உத்தியோகம், இராஜப்பிரபுக்கள் சிநேகம், பெரியார் கொண்டாட்டம் மகுடாபிஷேகம் என்று அவன் சாத்திரி சேனநாயக்கா சாதகத்திலே எழுதினால் குறை யென்ன? படித்திருக்க வேணுமா உத்தியோகம் கிடைக்க? சாதகத்திலேயிருந்தால் போதும். வியாபாரம் என்ன என்று தெரிய வேணுமா சர்வதேசவியாபாரச் சங்கத்திலே பிரதிநிதித்துவம் வகிக்க? எல்லாம் கிரகசாரம் தான் இருக்கவேண்டும்! கியூபா என்ற தீவிலே கவானா என்ற ஒரு பட்டணத்திலே சர்வதேச சங்கம்கூடக் கிரகசாரம் செய்யாதா? நன்றாகச் செய்யும். ஒரு நிபந்தனைதான் வேண்டும். பிரமன் சேனநாயக்கா கண்குளிரப் பார்த்து அருள் வைக்க வேண்டும். கிரகங்கள் எல்லாம் சொன்ன சொன்ன இடத்திலே நிற்கும்!

* * *

"அரசகுமாரி திருமணத்திற்கு அழைப்பு வந்திருக்கிறது ஆயிரம் ஆயிரம் பவுண் கொடுத்து மணமகன் மணமகள் பவனி பார்க்க இடம் வாடகைக்கு எடுக்க மற்றவர்கள் திண்டாடுகிறார்களே. நமக்குக் கிடைத்த தலைவோ பாக்கியம். திருமணப் பந்தலிலே உள்கட்டிலேயிருந்து பார்க்க அழைப்பு வந்திருக்கிறதே. போகுற செலவும் கொடுக்க அரசாங்கம் இருக்கின்றதே" என்று எல்லாம் குதூகலப்பட வேண்டிய சமயத்திலே பாவம் ஆ! கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே. கலியாண வீட்டுக்குப் போவோம் இராஜ குமாரியுடன் கைகுலுக்குவோமென்று எண்ணினார். இங்கே யூ. என். பி. மந்திரி சபை அல்லோலப்பட்டுப் போமே! அந்தப்புரத்திலேயிருக்கிற மந்திரி சபையை இந்தக் கேடு பிடித்த இடது சாரிகளும் தமிழ்க் காங்கிரசும் தரைமட்டமாகி விடுவார்களே. ஒரு நிமிஷம் விட்டு விலகினால் மந்திரி பதவியென்ற இந்திர போகம் பாழாகி விடுமே. ஐயோ கடவுளே, இந்த நிலைமையிலே ஒரு மனுஷனைச் சிதரவதை செய்வது நீதியா என்று அழுகிறார் சேனநாயக்கா!

* * *

மந்திரிகட்கு பாராளுமன்றக் காரியதரிசி என்ற ஒரு வகுப்பினர். நிரந்தரக் காரியதரிசி என்று இன்னொரு வகுப்பினர்; உதவிக் காரியதரிசி அல்லது அந்தரங்கக் காரியதரிசிகள் என்று இன்னொரு வகுப்பினர் உண்டு. எல்லாமாக மூன்று வகைக் காரியதரிசிகள். இந்த மூன்று வகைக் காரியதரிசிகளுக்கு காரியங்களைக் கவனிக்குமாறு டங்கிட்டுக் கொடுப்பது தலையாயான காரியம் எந்தக் காரியதரிசி எந்தக் காரியத்தைத் தரிசிப்பது என்ற பலத்த கேள்வி எழும்புகிறது.

ஒரு மந்திரியார் இந்தத் தொல்லையான வேலையைச் சுலபமாகத் தீர்த்து விட்டாராம் பாராளுமன்றக் காரியதரிசியைக் கூப்பிட்டு "நீர் நம்முடைய அறையிற்குள்ளே, ஆனால் திரைக்கு அப்புறம் ஒரு சின்ன மேஜையை வைத்து அருகே ஒரு நாற்காலியை வைத்து குந்திக் கொண்டிரும். நான் வரும்போதும் போகும்போதும் எழும்பி வழி விடும். இதுதான் உம்முடைய முதல் வேலை! அதற்கடுத்தபடியாக நான் சுற்றுப் பிரயாணம் போகும்போது நான் போவதற்கு முன்னதாக அந்த இடங்கட்குச் சென்று எனக்குப் பந்தம் பிடிக்க வருபவர்கள், நான் முன்னம் பிடிக்கறது, நீ முன்னம் பிடிக்கிறது என்று ஒருவரோடொருவர் சண்டையிடாமல் சமதானம் செய்து முறைப்படி ஒருவர் பந்தம் பிடிக்கவும், மற்றவர் சாமரம் வீசவும், மற்றவர் தூபம் போடவும், மற்றவர் சவிகை காவவும் ஏற்ற மாதிரி பாகச் சீர்ப்படுத்தும்" என்று மூப்பன் வேலையைக் கற்பித்தாராம். அதன்படி அவர் செவ்வனே செய்து பெரிய கலகமாய் வரக் கூடிய நிலைபரத்தை சாந்திபண்ணியிருக்கிறாராம்.

சந்தனம் அதிகம் கிடைத்தால் எங்கோ பூசு என்று யாரோ ஒருவன் சொன்னதாக வதந்தி காரியதரிசிகள் கதித்துக் கொண்டால் வேறு என்ன செய்வது? மூப்பன் வேலை செய்விப்பதுதானே.

இந்தியா--இலங்கை வர்த்தகம்

ஏற்றுமதி இறக்குமதி பாதிக்கப்பட்டுள்ளது

கொழும்பு, நவ 8

இந்தியாவிலும் இலங்கையிலும இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் காரணமாகவும் ஸ்தலங்களிலுள்ள வேறும் முக்கிய விஷயங்கள காரணமாகவும் இவ்வருட முதல் ஆறு மாத காலத்திலும இலங்கை இந்திய வர்த்தகம் வெகுவாகப பாதிக்கபட்டுள்ளது. முதல் ஆறு மாத காலத்திலும் (ஜூன் மாதமுடிய) இந்தியாவுக்கு இலங்கையிலிருந்து ரூ 100 லட்சமதிப்புள்ள பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன 1946-ம் ஆண்டில் இதே காலத்துக்கு இங்கிருந்து இந்தியாவுக்கு ரூ 200 லட்சம் மதிப்புள்ள பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இதில் இருந்து 1947-ம் வருட முதறபகுதி (6 மாதம்) இதில் 50 சதவிதம் ஏற்றுமதி துண்டு விழுந்துள்ளது தெரியவருகிறது

இதேபோன்று இந்தியாவில் இருந்து இறக்குமதியும் குறைந்துள்ளது 1946-ம் ஆண்டு முதல் ஆறு மாத காலத்துக்கும் ரூ 950 லட்சம் மதிப்புள்ள பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன 1947-ம் ஆண்டு முதல் 6 மாத காலத்திலும் ரூ 720 லட்சம் மதிப்புள்ள பொருட்களே இறக்குமதி செய்யப்பட்டன இதன்படியும் இறக்குமதி ரூ. 230 லட்சம் வரையில் குறைந்துவிட்டது.

இந்திய-தென்னாப்பிரிக்க தகராறு

இந்தியாவின் கட்சியை விஜயலட்சுமி எடுத்துரைப்பார்

லேக்ஸக்ஸெஸ்
நியூயார்க், நவ. 7

ஐ நா. சபையின் அரசியல் கமிட்டி முன் இந்திய-தென்னாப்பிரிக்க தாராறவுமபோது இந்தியாவின் கட்சியை எடுத்துரைக்கும் முழுப்பொறுப்பையும் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் ஏற்றுக்கொள்வார் என்று தெரிகிறது.

இது சம்பந்தமாக இந்திய தூதுக் கோஷ்டியின் தலைவர் என்ற ஹோதாவில் தமது சகாக்களுடன் அவர் ஆலோசனைகள் நடத்தியுள்ளார். விவாதத்தை ஆரம்பித்து வைக்கையில அவர் 30 நிமிஷம் வரை பேசுவார் என்றும் பின்னர் கேள்விகளுக்கு பதில் அளிப்பார் என்றும் தெரிகிறது. திரு எம். எஸ். சேதத்ல் வாட் சட்டப் பிரச்னைகளைக் கவனிப்பார். (ராய்ட்டர்)

எதிரியை கோர்ட்டில் ஆஜர்செய்ய தவறினர்

வர்த்தகர் பிணைப் பணம் பறிமுதல்

கொழும்பு, நவ 8

ஆந்திரிஸ் என்னும் பொடி சிங்கோ என்பவரை ரூ 500 க்கு பிணையெடுத்த ஜி. டி. சியநேரிஸ என்னும் வர்த்தகர் எதிரியை கோர்ட்டில் ஆஜர்செய்ய தவறிவிட்டதால் அவருடைய பிணைப் பணத்தைப் பறிமுதல் செய்து எதிரிக்கு வாரண்டு பிறப்பிக்கும்படி கொழும்பு அசைஸ நீதிபதி தீர்ப்பளித்தார்.

பகிரங்க கடிதம்

சுகாதார ஸ்தலஸ்தாபன மந்திரி அவர்களுக்கு:

அன்புள்ள திரு பண்டாரநாயக்காவே!

யாழ்ப்பாணத்தில் சிங்களவர் தமிழர் ஒற்றுமையைப்பற்றி நீர் சமீபத்தில் குறிப்பிட்டுள்ளீர். பூனை நிர்வாணத்திற்குச் சென்றாலும் அங்கும எலி பிடிக்கத்தான் செய்யும என்பதையே உமது பேச்சு எமக்கு ஞாபகப்படுத்துகின்றது நீர் சிங்கள மகா சபையின் தலைவர். உமது கொள்கை இலங்கை சிங்களவருக்கு. அதுவுமல்லாமல் உமது சிங்கள ஜாதியினருக்கு என்பதே. ஆகவே நீர் தமிழரின் ஒற்றுமை வேண்டும என்று கேட்கும் பொழுது அதன் அர்த்தம் எமக்குப் புரியாமல் ஆச்சரியத்தையே கொடுத்திருக்கிறது. உமமுடைய மகா சபை இன்னும் உருகுலையாமல் இருக்கின்றது அச்சபையால் பிரயோஜனமில்லையென்று நீர் எங்காவது பகிரங்கமாக சொல்லவுமில்லை. ஆதலின், "சிங்களவரின் அசல் சிங்களவராகிய" நீர் தமிழரின் ஒற்றுமையைக் கோருவதன் அர்த்தம் என்ன?

கடைசி இந்தியன் இலங்கைக் கரையைவிட்டு அகலுவதை நீர் பார்த்துச் சந்தோஷப்படவிருப்பதாக அரசாங்க சபையில் கூறியதை மறந்துவிட்டீரா? இதில் இலங்கையைத தாய்நாடாகக் கொண்ட இந்தியர்களையும் சேர்த்தத்தான் சொல்லியிருக்கின்றீர். இந்நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தால் என்ன செய்வீர் என்பதையும் கூறியிருக்கின்றீர். ஆங்கிலேயர்கள் யாவரையும் இந்து சமுத்திரத்தில் ஆழ்த்திவிடுவதாக நீர் கூறிய சிறிய சம்பவம் ஞாபகமிருக்கிறதா?

நீர் பிரதம மந்திரியாக வருவதற்கு உம்மிடம் சகல அம்சங்களும் பொருந்தியிருப்பதாக உமது சிநேகிதர்கள் கூறியிருக்கிறார்கள். நீரும் அதை பகிரங்க மேடையில் வெளிப்படுத்தியிருக்கின்றீர். ஆனால் உம்முடைய தன்னடக்கம உம்மை சேனநாயக்காவுடன் போட்டி போடாமல் செய்து விட்டது. பிரதம மந்திரியாக வருவது, சர்வாதிகாரப்பதவிக்கு அடுக்காதாகும். உம்முடைய சொல்லை நாம் நம்புவதாக இருந்தால் கூடிய சீக்கிரத்தில் இந்தியர்களைத் துரத்துவதையும், வெள்ளையரைக் கடலில் ஆழ்த்துவதையும் தான் நாம் உமமிடமிருந்து எதிர்பார்க்கக்கூடும்.

நீர் எவ்விதம் சிங்களவர்-தமிழர் ஒற்றுமையை விரும்புகிறீர் என்பதை உமது "சிங்கள பலய" நன்கு வெளிப்படுத்தியிருக்கிறது அதுவும் நீர் யாழ்ப்பாணத்தில் சிங்களவர்-தமிழர் ஒற்றுமை வேண்டுமென்று கூறிய சுப தினமாகிய நவம்பர் ஒன்றும் தேதியில்தான்.

"சிங்கள பலய" பத்திரிகையின் தலையங்கத்தில்சில வசனங்களை மட்டும் உமக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

"தமிழர்களால் அன்றும். இன்றும் சிங்களவர்களுக்கு எவ்விதஒத்துழைப்பும் உண்டாகவில்லை".

"எங்கள் சிங்கள ஆதிக்கம் நிலவிய காலத்தில் இந்த யாழ்ப்பாணத் தமிழர்களை அடக்கி ஒடுக்குவது அவ்வளவு பிரமாதமான காரியமல்ல; இப்பொழுது சிறிது கஷ்டமாய்த்தான் இருக்கிறது."

"எக்காரணம் கொண்டும் யாழ்ப்பாணத் தமிழர்களோடு ஒத்துழைப்பது, அவர்களை அண்ட விடுவது புத்திசாலித்தனமான செய்கையல்ல."

திரு. பண்டாரநாயக்காவே! உமது ஒற்றுமைப் பேச்சு மகா மோசமான தட்டுவாணித்தனமல்லாமல் வேறு என்ன? உமமைத் தமிழ் மக்கள் நம்புவதால் அல்லது உமது பத்திரிகை காலத்துக்குக் காலம் உளறுவதை உமது ஜாதியினர் நம்புவதால் ஒரு விதமான அபாயமுமில்லை. ஆனால், நாயின் வாலில உள்ள கோணலை ஒருபோதும் எடுக்க முடியாதென்பது தமிழ் மக்களுக்குத் தெரியும். உம்மை அவர்கள் நம்புவதற்கு அவ்வளவு புத்தியற்றவர்களுமல்ல என்பதை உமக்குத் தெரியப்படுத்துகிறேன்.

இங்ஙனம்,
மாமா முருகேசு

கொழும்பு
8-11-47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையற்றோர் பிரச்னை அதிகரிக்கிறது

கொழும்பு, நவ. 8

தேசத்திலே இப்பொழுது வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை அதிகரித்து வருகிறது தொழில்- சமூகசேவை மந்திரி காரியாலயம் இந்நிலைமையில் நெருக்கடியை தடுக்க நடவடிக்கை எடுத்துவருவதாக இம்மந்திரி இலாகா அதிகாரி ஒருவர் கூறுகின்றார்.

கத்திக்குத்து

ஊர்காவற்றுறை, நவ. 6

காரை நகர் மேற்கைச் சேர்ந்த மயிலன் பொன்னுத்துரை யென்னும் 16 வயது வாலிபனை சென்ற ஜூன் மாதம் 20-ம் தேதி கத்தியால் குத்திக் காயம் விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டி அதே ஊரைச் சேர்ந்த ஐயன் நாகமணி மீது ஓர் வழக்கு ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது. மாஜிஸ்டிரேட் விசாரணையின் பின்னர் எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு தீர்ப்பை வருகிற 13-ம் தேதிக்கென ஒத்திவைத்து எதிரியை ரிமாண்டில் வைக்கும்படி கட்டளையிட்டார். [ந-நி]

சிர

நேத்திராஞ்சனத் தைலமே

சகல வைத்தியர்களாலும் கைவிடப்பட்ட எம்மை புத்தயிர் கொடுத்து காப்பாற்றியது

சப்தத்வு வாலிப சங்க கௌரவ காரியதரிசி திரு. வி. கார்த்திகேசு செல்லுவதாவது:

'சென்ற சில காலங்களாக சிர ரோக உபாதையினால் கண்ணிலும் கடும் வலித்தம் ஏற்பட்டு பலவித வைத்தியங்கள் செய்தும் சுகம் காணாது கடைசித் தடவையாக திரு. எம். கே. ஜெகநாதன் கண் வைத்தியரினால் வெளிவரப் பெற்ற சிர நேத்திராஞ்சனத் தைலத்தை இந்த கிழமை பாவித்தமட்டில் எமது சகல உபாதைகளும் நீங்கியதுடன் எனது கண்ணுக்கும் பூரண சுகத்தைப் பெற்றேன். இத் தைலத்தின் அபூர்வகுணத்திற்கும் திறமைக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இதன் நற்குணத்தை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்த விரும்புகிறேன்''. ஒப்பம்

திரு வி. கார்த்திகேசு
கௌரவ காரியதரிசி,
புங்குடுதீவு.

சிர

நேத்திராஞ்சனத் தைலம்

கண் புகைச்சல், குத்து, கூச்சம், மாலைக்கண், சிவப்பு முதலிய கண் சம்பந்தமான சகல ரோகங்களையும், தும்மல், நீர்வடிதல் முதலிய பீனிச வகைகளையும், கபால இடி, தலைவலி, மயக்கம், இரைமல், இளைப்பு, நரம்புத் தளர்ச்சி, மூலச்சூடு ஆகிய ரோகங்களையும் நிவர்த்தி செய்து, குளிர்ச்சியையும், ஞாபக சக்தியையும் கொடுக்கும். அஸ்மா, காசம், நீரழிவுக்கும் ஓரளவு சுகங் கொடுக்கும். காலம் நீடித்த நோயாளர்கள் நேரிலும் கடிதமூலமும் விபரம் தெரிந்துகொள்ளலாம்.

விலாசம் ஆங்கிலத்தில் தெளிவாய் எழுதுக.

2 அவுன்ஸ் சீசா ரூ. 3-25
4 ,, ,, ரூ. 5-50

தயாரிப்பாளர்:-
எம். கே. ஜெகநாதன்,
யூனிக் கண் வைத்தியர்,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

காலால் உதைத்தவர் ஐம்பது ரூபாய் அபராதம் கொடுத்தார்

சாவகச்சேரி, நவ 6

வரணி இயற்றாலையைச் சேர்ந்த சின்னக்குட்டி சிதம்பரம் என்பவர் காசிவேலன் என்பவனுக்கு காலால் உதைத்து காயப்படுத்தினார் என்று தொடரப்பட்ட வழக்கு இன்று சாவகச்சேரி போலிஸ் கோர்டில் விசாரணைக்கெடுக்கப்பட்டு விசாரணை முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு நீதிபதி எதிரிக்கு ஐம்பதுரூபாய் அபராதம் விதித்தார். (ந-நி)

வடிகட்டிய சாராயம் வைத்திருந்தார்

எதிரிக்கு ரூ 250 அபராதம்

கொழும்பு, நவ 8

தலங்கம தெற்கைச்சேர்ந்த பி. அலிஸ பெரேரா என்பவர் வடிகட்டிய சாராயம் வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கு கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் திரு. பண்டிக குணவர்தனா முன் விசாரணைக்கெடுக்கப்பட்டது. நீதிபதி விசாரணை முடிவில் எதிரிக்கு ரூ. 250 அபராதம் விதித்தார். அபராதம் செலுத்தத் தவறின் 6 மாத சிறைத் தண்டனையென்றும் தீர்ப்பளித்தார்.

ஜல சப்ளை திட்டங்கள் பற்றி மகாநாடு

கொழும்பு, நவ. 8

சுகாதார ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு எஸ். டபிள்யூ ஆர்டி. பண்டாரநாயகா தலைமையில் நேற்று காலை ஒரு மகாநாடு நடைபெற்றது. இம்மகாநாட்டில் இலங்கையிலுள்ள முனிசிபல் சபைகள் அர்பன் சபைகள், நகர கவுன்ஸில்கள் முதலியனவற்றில் ஜல சப்ளைகள் செய்வது சம்பந்தமான 79 திட்டங்கள்பற்றி ஆராயப்பட்டன. இத்திட்டங்களை நிறைவேற்ற பொது மராமத்து வேலை இலாகாவிலே ஒரு உப இலாகாவை ஆரம்பிப்பதுபற்றி மகாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது.

கத்திக் குத்து வழக்கு

ஊர்காவற்றுறை, நவ 6

மண்டைதீவைச் சேர்ந்த நாகலிங்கம் நடராஜா என்பவருக்கு அதே ஊரைச் சேர்ந்த சிநாதர் இலிங்கப்பிள்ளை என்பவர் கத்தியால் குத்திக் கடுங்காயம் வருவித்ததாகக் குற்றஞ்சாட்டி ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஓர் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மாஜிஸ்டிரேட் விசாரணையின் பின்னர் எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு தீர்ப்பை வருகிற நவம்பர் மாதம் 13-ம் தேதிக்கென ஒத்தி வைத்த அத தேதிவரைக்கும் எதிரியை ரிமாண்டில் வைக்கும்படி கட்டளையிட்டார். (ந-நி)

புதிய பாலம் திறக்கப்பட்டது

மட்டக்களப்பு, நவ. 7

மட்டக்களப்பில் இருந்து சுமார் 40 மைல் தூரத்தில் கோவில்-பனங்காடு கிராமங்களை இணைக்கும் புதிய பாலத்தை மாஜி அரசாங்க சபை அங்கத்தவர் திரு. எஸ். தர்மரத்தினம் திறந்துவைத்தார் இப்புதிய பாலத்தின் நீளம் 300 அடியாகும்.

கட்டிடத்துக்கு

தேவையான சிமந்தும்

மற்றச் சாமான்கள் எல்லாம்

எங்களிடம் குறைந்தவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கம் - கொம்பனி

No-38. மூன்றுங்குறுக்குத் தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

டெலிபோன்: 2029 டெலிகிராம்: 'ENVAITLIN

கிளை:- பெரியகடைத் தெரு,
யாழ்ப்பாணம், டெலிபோன்: 30.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

குடும்ப ஆதிக்கம் பெரும் இடும்பை

மக்கள் மரத்தடியிலும் திண்ணையிலும் காலங்கழிக்க மந்திரி, தலைவருக்கு மாடமாளிகைகள் வேண்டுமா?

யூ. என். பி. யினருக்கு சுதந்திரமா? இலங்கைக்கு சுதந்திரமா?

சென்ற வெள்ளிக்கிழமை 'ஜனசக்தி'' எழுதுவது:-

இலங்கையின் தேசாபிமானிகளே! இந்நாட்டிலிருக்கும் சுயநலக் கும்பல்கள் ஒன்றுகச் சேர்ந்து சுதந்திரத்தின் வாயிலை குழ்ச்சியாக தடுத்துக் கொண்டிருப்பது உங்களுக்கு தெரிகிறதல்லவா? விழிதெழுங்கள்!

அன்றைக்கு ஹிட்லர், டோஜோ, முசோலினிகள் பின்பற்றிய சாணக்கிய தந்திரகதைத்தான் இன்று, சேனநாயக்கா,-கொத்தலாவல - துயவர்த்தனாக்களும் பின்பற்றி ஏழை மக்களை வாட்டி வதைக்கும் அநியாயம் உங்களுக்கு தெரிகிறதல்லவா? தயாராகுங்கள்! கடைசிப் போராட்டத்திற்கு தயாராகுங்கள்.

முழந்தாள் பணியச் செய்து, சுதேசிய சதிக்காரர்களையும், குடும்ப ஆதிக்கத்தையும் பூண்டோடு வேரறுத்து, உண்மையான ஜனநாயக லங்காவை நிர்மாணிக்கப் போராடுங்கள்!

சேனநாயக்கா அரசாங்கத்திற்கு எதிராகப் போராடி, அதைக் குப்புறக் கவிழ்த்து, மக்கள் வாழ்க்கையை செழுமையாக்கக்கூடிய முற்போக்கான-ஜனநாயக-அரசாங்கத்தை நிறுவ இடது சாரிகளும் முற்போக்கு வாதிகளும் ஒன்று கூட வேண்டியதன் அவசியம் உங்களுக்கு தெரிகிறதல்லவா? கடைசிப் போராட்டத்தின் சரியான வழியும் அதுவேயாகும்!

தேசாபிமானமுள்ள இலங்கை மக்கள்-ஜீவனோபாய மார்க்கமின்றி தெருக்களிலும் சாலைகளிலும் அங்குமிங்கும் அலைந்து திரியும் தொழிலாளர்கள்-இன்றைக்கு அவர்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளை பெற்று ஆறுதலடைய விரும்புகிறார்களென்று உங்களுக்குத் தெரிகிறதல்லவா? எனவே, சர்வ தேசியப் புரட்சி முடிவடையும்வரையும்வாழக்கூடிய சக்தி அவர்களுக்கு இல்லையென்பதும், பட்டினியைத் தாங்க முடியாதென்றும் குழந்தைகளும் தாய்மார்களும் அழுது புலம்பும் ஹீனக் குரல் உங்களுக்கு தெரிகிறதல்லவா? விழிதெழுங்கள்!

சேனநாயக்கா அரசாங்கத்தை குப்புறக கவிழ்த்தி, முற்போக்கான தேசிய அரசாங்கத்தை நிறுவப் போராடுங்கள்!

சாம்ராஜயத் திட்டத்தை ஒழித்துக் கட்டுங்கள்!

சோஷியலிஸ்ட் லங்காவை நிர்மாணியுங்கள்!

அன்றாட வாழ்க்கைத் தேவைகளன்றி அலைலுறுபவர்களே இனி வீறுகொண்டெழுங்கள்! போராடுங்கள்!!

ஃ ஃ ஃ

சென்ற வியாழக்கிழமை மாலை வெளிவந்த 'லங்கா தீப' எழுதுவது:-

'ஐக்கிய தேசியக் கட்சியினர் இப்பொழுது சோஷியலிஸ்ட் வேஷத்தில வெளிவந்திருப்பதானது மிகவும் இலேசாக மனிதர்களை இரையாக்கிய, விளும்பிய, புலி போட்ட சாது வேஷத்தைப் போன்றதாகும்.'

'சுதந்திரத்தைக் கொண்டு வந்திருப்பதாக கோஷமிடும் யூ என். பி யினர் உண்மையிலேயே பூரண சுதந்திரத்தைப் பெற்றிருக்கிறார்கள்'

அப்படி சுதந்திரமின்றேல், வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து மரத்தடிகளிலும் தெரு திண்ணைகளிலும் காலங்கடத்தும்போது, பிரதம மந்திரிக்கும் பார்லிமெண்டுத் தலைவர்களுக்கும் "டெம்பல்ட்ரீஸ்" மும்டாஜ் போன்ற பெரும் மாளிகைகளை நிருத்தியமைப்பதற்கு பல லட்சக் கணக்கான ரூபாய்களை இஷ்டம்போல் நாஸ்திபண்ணுவார்களா?

ஜீவனோபாய மார்க்கமின்றி திண்டாடும் தொழிலாளர்கள் வரவர அதிகரித்துக்கொண்டே இருக்கிறார்கள். எனினும், இலாத பதவிகளை, உண்டாக்கி பெரிய குடும்பத்து பெரிய மனிதர்களுக்கு வழங்குவார்களா? இவர்களின் - சேனநாயக்காவின் குடும்ப ஆதிக்கத்தை பார்லிமெண்டிலிருக்கும்எதிர்கட்சியினர் எதிர்த்துப் போராட வேண்டும்.

(ஸ்ரீ ராகுல பிக்கு)

புதிய அரசாங்கத்தை கவிழ்த்துவிட வேண்டும்

தர்க்கத்திறமை எங்களுக்கிருந்த போதிலும், சட்டம் அவர்களிடம் இருக்கிறது பேச்சுத்திறமை எங்களுக்கிருந்த போதிலும், அவர்கள் அதிகாரப்பலம் பெற்றிருக்கிறார்கள். எனவே தேச மக்களுக்கு நாம் சேவை செய்ய வேண்டுமானால் சேனநாயக்கா அரசாங்கத்தை உடனே குப்புறக் கவிழ்த்து விட வேண்டும்.

(மதிய கொழும்பு பிரதிநிதி பீட்டர் கெனமன்)

சேனநாயக்காவுக்கு சவால்

சேனநாயக்கா கட்சியினர் அரசியல் அறிவில்லா மக்களிடையே எனக்கு எதிராக பொய்ப்பிரசாரங்கள் செய்து, என்னை ராஜிநாமாச் செய்து மறுபடியும் தேர்தலுக்கு போட்டியிடும்படி அறைகூவுகிறார்கள். "யூ என். பி. தலைவரான திரு. சேனநாயக்கா மீரிகமத் தொகுதியில் அங்கத்தினர் பதவியை ராஜினாமாச் செய்து விட்டு இந்தியப் பிரச்னையை முன் வைக்கோ அல்லது வேறு பிரச்னைகளை உண்டாக்கியோ வெள்ளவத்தை-கல்கிசைத் தொகுதிக்கு என்னுடன் போட்டியிட முடியுமானால் அவர் வரட்டும், அப்படியானால் உடனே நானும் ராஜினாமாச் செய்யத் தயாராயிருக்கிறேன்."

[வெள்ளவத்தை-கல்கிசை பிரதிநிதி கொல்வின் ஆர். டி சில்வா]

டொமினியன் சொல்லே இல்லாத அறிக்கை

"இங்கிலாந்திலிருந்து வெளிவரும் எந்த ஒரு அறிக்கையிலும் "டொமினியன்" என்ற சொல்லேயில்லை. திரு. சேனநாயக்கா அந்தச் சொல்லின் அர்த்தத்தை அறியாமல் பேசுகிறார்."

(ருவான்வெல பிரதிநிதி என். எம். பெரேரா)

எல்லை முஸலிம்களின் நடத்தை

பஞ்சாப் சர்க்கார் அறிக்கை

சிம்லா, நவ. 7

எல்லைப்புறத்திலுள்ள முஸலிம்கள் மேற்குப் பஞ்சாப் போலிஸார், உளநாட்டுப் பாதுகாப்பு படையினர் முதலியோருடன் அம்ருத்சர் முதலிய இடங்களில் புகுந்து காலநடைகளை திருடினர் என்றும், கிழக்குப் பஞ்சாப் மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் பஞ்சாப் சர்க்காரால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கை கூறுகின்றது மற்ற ஜில்லாக்களில் அமைதி நிலவுவதாகவும் கூறப்படுகிறது.

ரயில் மோதி மரணம்

கொழும்பு, நவ. 7

எகொடஉயணைக்கும் பாணந்துறைக்குமிடையில எகொட உயணையைச்சேர்ந்த எம். பெர்னான்டோ என்பவர் மீது ரயில ஏறியதால் அவர் உடனே லுணுவை ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுத்தப்பட்டு அங்கே மரணமானார். விசாரணை நடத்திய அதிகாரி அவர் விபத்தினால் மரணமானாரென்று தீர்பளித்தார்.

கொலை வழக்கு

சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்படும்

வேலணை நவ. 6

வேலணையைச் சேர்ந்த கார்த்திகேசு குமாரவேலு என்பவரைக் கொலை செய்ததாகக குற்றஞ் சாட்டி ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஓர் வழக்கு ஊர்காவற்றுறை போலிஸாரால அதே ஊரைச் சேர்ந்த இளையதம்பி, காங்கேசு காமமணி வேலுப்பிள்ளை என்பவர்களுக் கெதிராக ஓர் வழக்கு தொடரப்பட்டது. மாஜிஸ்டிரேட் விசாரணை முடிந்ததும் வழக்கை சுப்ரீம் கோர்ட்டிற்கு விசாரணைக்கு அனுப்பி வைத்தார். (ந-நி)

அரசாங்க செலவில் தந்தி அனுப்புவோர்

கொழும்பு, நவ 8

அரசாங்கத்தின் செலவில் தந்திகளை அனுப்பக்கூடியவர்களின் ஜாபிதாவிலே பலர் இப்பொழுது சேர்க்கப்பட்டுள்ளனர். பிரதம மந்திரி, சபாநாயகர் (பிரதிநிதிகள் சபை) உதவி சபாநாயகர், மந்திரிமார், அந்தரங்க காரியதரிசிகள், நிரந்தரச் காரியதரிசிகள், பாராளுமன்றக் காரியதரிசிகள், டெபுடி காரியதரிசி (பொக்கிஷ இலாகா), ஜூடிஷியல் சர்வீஸ கமிஷன் காரியதரிசி, மந்திரிசபை காரியதரிசி, உப காரியதரிசி பாராளுமன்ற லிகிதர்கள், செனட்சபை லிகிதர்கள், செனட் தலைவர் பிரதிநிதிகள் சபை சார்ஜன் அ-ஆர்ம்ஸ், பிரதிநிதிகள்சபை செனட் சபை அங்கத்தவர்கள் முதலியோரும் இனிமேல் அரசாங்க செலவில் தந்தியனுப்லாம.

நங்கையைக் கடத்தியதாக வழக்கு

எதிரிக்கு ரூ. 500 அபராதம்

கொழும்பு, நவ 8

நீர்கொழும்பு குடஹக்கபொலா என்னுமிடத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன், டோனி ஜி பெரைரா என்னும் 16-வது நங்கையை பாடசாலையிலிருந்து வருகையில் கடத்திச் சென்று பலாத்காரம் செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் எதிரிக்கு கொழும்பு ஸைஸை கோர்ட் நீதிபதி திரு நாகலிங்கம் கோர்ட் கலையும் வரை சிறைத் தண்டனையும் ரூ 500 அபராதமும் விதித்தார்

அரக்கானில் புரட்சி

ஒடுக்க கூர்க்கத் துருப்புகள்

ரங்கூன், நவ. 5

அரக்கான் தனி சுதந்திரம் கோரி புரட்சி செய்வதை ஒடுக்குவதற்கு பர்மிய துருப்புகளும் கூர்க்க துருப்புகளும் அனுப்பப்பட்டிருக்கின்றன. அரக்கான் பகுதி போலிஸ படையும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

கள்ள ஆயுதமுள்ளோர் சுட்டுத்தள்ளப்படுவர்

கள்ளத்தனமாக லைசென்ஸின்றி துப்பாக்கி முதலி ஆயுதம் வைத்திருப்போர் பொது ஜனங்கள் பார்வையிலே சுட்டுத்தள்ளப்படுவர் என்று பர்மா சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

பர்மா சுதந்திரமடைவதால் பர்மா சிவில் சர்வீஸ் இனி பிரிட்டனுடன் தொடர்புடையதாக இருக்காதென்று பர்மா சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

98 ரதினக் கல்லிழைத் தங்க மாலையை அழகான தங்கப் பேழையில் வைத்து பர்ம குடியரசின் முதல் தலைவரான பாங் வே ஷ்வபா எடுத்துக் கொண்டு எலிஸபெத் இளவரசி கலியாணப் பரிசாகக் கொடுக்க லண்டனுக்குப் புறப்படுகிறார். (ராய்ட்டர்)

தப்பி யோடிய கைதி பிடிக்கப்பட்டான்

கொழும்பு, நவ. 8

மகார சிறையிலிருந்து வியாழக்கிழமை மாலை தப்பியோடிய பிளயூ. ஹரிஸன் பெரைரா என்னும் கைதி கடவத்தை-கணேமுல்லாஸதாவில் 4-வது மைலில் நேற்று மாலை கைது செய்யப்பட்டார் என்று கூறப்படுகிறது.

இந்தியாவில் பத்திரிகை காகித உற்பத்தி

புதுடில்லி, நவ. 8

வருடத்தில் இந்தியா சராசரியாக சுமார் 40,000 டன் பத்திரிகைக் காகிதத்தை இறக்குமதி செய்துவருகிறது. இப்பொழுது இந்தியாவிலே பத்திரிகைகாகித உற்பத்தி தொழிற்சாலையொன்றை நிர்மாணித்து வேலை நடக்குமாயின் அதனால் பிரயோஜனம் அதிகம் இருக்கும் என்று கருதப்பட்டது. மத்தியமாகாண சர்க்கார் ஒரு பத்திரிகை காகித உற்பத்தி தொழிற்சாலையொன்றை அமைக்கநடவடிக்கைஎடுத்துள்ளது. இத்தொழிற் சாலையில் தினசரி 100 டன் பத்திரிகை காகிதம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. நவீன இயந்திர வகைகள் இங்கு அமைக்கப்படும்.

சட்ட விரோதமாக களுத்துறை, நவ 8 கள் வைத்திருந்தார்

நாகொடையைச் சேர்ந்த ஜஸ்டின் என்பவர் சட்ட விரோதமாக பெரும் அளவில் கள் வைத்திருந்ததாக குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் களுத்துறை மாஜிஸ்டிரேட் எதிரிக்கு ரூ. 200 அபராதம் விதித்தார்.

இளவரசி எலிஸபெத் திருமணப் பரிசாக இலங்கை படுக்கையறைத் தளவாடங்களை பிரிட்டனுக்கு அனுப்பும்போது அதுடன் இங்கிருந்து ஒரு இலங்கையரும் செல்வாரென்றும் அப்பொருள்களை அங்கு சரிபார்த்து ஒப்படைப்பது அவருடைய கடமையென்றும் அவருக்கு போக வர செலவுகளும் மற்றும் செலவுகளும் சர்க்கார் கொடுக்குமென்றும் கூறப்படுகிறது. இத்தளவாடங்களுக்காக இலங்கை சர்க்கார் ரூபா 15,000 ஒதுக்கியுள்ளது

தங்க பஸ்பம்

அமிர்தம் போன்ற ருசியும் மணமும் உள்ள சதாவரி லேகியத்தில் தங்க பஸ்பம் சேர்த்துச் சாப்பிட்டுவந்தால் இரத்த விருத்தி, சரீர புஷ்டி உண்டாகும். தேஜஸ, புத்திர சந்தானம் உண்டாகும். நீர்கடுப்பு ரோகங்கள் சுகமாகும். நரம்புகளுக்கு பலம், வாலிபம் உண்டாகும்.

40 வேளை (20-நாள்) தங்கபஸ்பம் ரூ 20—00
" " " சதாவரி லேகியம் ரூ. 3—00
வி. பி. செலவு ரூ. 2-00 (கேட்லாக் இனாம்)

தண்டபாணி வைத்தியசாலை,
பெரியகடை வீதி, பழனி (S. India.)

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை!

புதிய மதுரமான ஆப்பிள் பழங்கள் கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே எங்கள் பந்தோபஸ்தான அறைகளில் அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி சேகரிக்கப்படுகின்றது.

ஜி. ஸி. ரூேச் அன் கோ.,
மலிபான் தெரு.
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

- சிமந்தி: (இங்கிலீஷ் & பெல்ஜியம்)
- கை வாளிகள்: 7 அங்குலம் துவக்கம் 14 அங்குலவரைக்கும்.
- வார்னிஷ்: இங்கிலீஷ் & இந்தியன்.
- ஜன்னல் கண்ணாடிகள்:
- தீந்தைகள்: 28 ரூத்தல் தகர டின்களில் அடைக்கப்பட்டது நிறம்: பச்சை, தேக்கு, சொக்கலட் நிறங்களில்.
- முள்ளுக் கம்பி.
- பித்தளை, இரும்பு, ஸ்குருப் ஆணிகள்.
- இரும்பு கூரைத் தகடுகள்: 9'X3'X24 G

இன்னும் வேண்டிய கட்டிடச் சாமான் முதலியவைகளுக்கு, கடித மூலமாகவும் நேரிலும் விசாரித்துக்கொள்ளலாம்.

மெஸ்க்கன் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ்,
165, ஆர்மர் வீதி, கொழும்பு.
தெ-போன்:- 4461. தந்தி விலாசம்: "மெஸ்க்கன்"
தபால் பெட்டி 826.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுக்குண்டிலும் பார்க்க பலமான ஆயுதம்

"சோஷியலிஸ்ட் தத்துவம்" என்கிறார் சோவியத் எழுத்தாளர்

புரட்சி விழாவின்போது மழையின் குறுக்கீடு

ஜனாதிபதி ட்ரூமனின் வாழ்த்துச் செய்தி

மாஸ்கோ, நவ. 7

"அணுக்குண்டைப்போர்த்தியிருந்த மர்மம் இப்போதுகிடையாது" என்ற குறிப்புப்பட சோவியத் அயல் நாட்டு மந்திரி மொலட்டோவ் செய்த புரட்சிதினப் பிரசங்கம் சோவியத் பத்திரிகைகளில்பூரணமாக வெளியிடப்பட்டது. மாஸ்கோ ராஜ தந்திரிகள் இப்பிரசங்கத்தை "சோவியத் மக்களுக்கு மொலட்டோவ் தந்த பிறந்த நாள் பரிசு"என்று குறிப்பிட்டார்கள் அநேகமான சோவியத் பத்திரிகைகள் இப்பிரசங்கத்துக்கு எவ்வித விமர்சனமும் எழுதவில்லை.

சோவியத் ராணுவப் பத்திரிகையான"ரெட்ஸ்டார்"ல் பாவ்லெஸ்கோ என்னும் எழுத்தாளர்'அணுக்குண்டிலும்பார்க்க பலம் மிகக ஆயுதம சோஷியலிஸ்டு தத்துவம். அதனால் மனித உணர்ச்சியை வெற்றி கொள்வோம்" என்று எழுதியிருக்கிறார்.

புரட்சி விழா

செஞ்சதுக்கம் இதுவரை கண்டிராத மஹத்தான ராணுவ அணிவகுப்பு இன்று நடைபெற்றது. அதன் பின் மழையும், பனிக்கட்டியும் விழ ஆரம்பித்ததால் சோவியத் 30-வது புரட்சி விழாக் கொண்டாட்டம் சற்று பாதிக்கப்பட்டதுலொறிகளில்பாரஷூட் வீரர்கள் பவனி, ஆயுதத தளவாடங்கள் பவனி ஆகியன மிகச் சிறந்து விளங்கின. இவ் அணிவகுப்பை சோவியத் ராணுவ மந்திரி திறந்து வைத்தார்.

ராணுவ அணிவகுப்பின் பொதுஜன அணிவகுப்பு நடைபெற்றது. அதற்குப் பிறகு வீதிகளூடாகப் பொது மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று தாகவிடுதலை நாளைக் கழித்துக் கொண்டிருந்தனர். புரட்சி சம்பந்தமாக முழு சோவியத்பூமியிலும் 3 நாள் விடுதலை விடப்படுகிறது.

லெனின் சமாதி மேல் நின்று கொண்டாடட வைபவங்களை சோவியத் அயல் நாட்டு மந்திரி பார்த்துக்கொண்டிருந்தார். பிரதமர் ஸ்டாலின் விழாவிற்குச் சமுகமளிக்கவில்லை.

அணிவகுப்பின் போது பேசிய மரீசஷல்புல்கனின் பின்வரும் ஆறு குறிப்பிட்டார்:-

"மனிதனை மனிதன் சுரண்டாத, வேலையிலாத் திண்டாட்டம் பொருளாதார நெருக்கடி அற்ற சோஷியலிஸ்டு சமுதாயத்தை நாம் அமைத்து விட்டாம் முதலாளித்தவ அகதிகள் ஒடுங்கிப்போய்க்கொண்டிருக்கின்றனர். ஜனநாயகசக்திகளுக்கு வளர்ச்சிக்குமேல்வளர்ச்சி அடைந்து வருகிறது. முதலாளித்தவ சக்திகள் ஒரு புதிய ஏகாதிபத்திய யுத்தத்தை ஆரம்பிக்கப் பார்க்கின்றன சோவியத் நாடு இதுவரை செய்தது போலவே சமாதானம் பாதுகாப்பு ஆகியவற்றிற்குப் போராடிக் கொண்டுவருகிறது. சோவியத் நாட்டின் இக்கொள்கையை முன்னேற்ற மனிதகுலம் பூராவும் ஆதரித்து அரண் செய்கிறது. முற்போக்காளர் யுத்தத்தை விரும்பவில்லை. நிரந்தர சமாதானத்தையே விரும்புகின்றனர்.

ட்ரூமன் செய்தி

வாஷிங்டன், நவ 7

அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் கீழ்க்கண்ட செய்தியை சோவியத ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.

"சோவியத் சோஷியலிஸடு குடியரசின் இத்தேசிய வருடாந்த விழாவின போது சோவியத மக்களுக்கு அமெரிகக மக்களின் மனமார்ந்த நல்லாசியைத் தயவு செய்து தெரிவியுங்கள்"

[ராய்ட்டர்]

தொழிலாளர் பொருளாதார அபிவிருத்தி

ஆசிய பிரதேச மகாநாட்டில் பல தீர்மானங்கள்

புதுடில்லி, நவ 8

ஆசிய பிரதேச தொழிலாளர் மகாநாட்டில் தொழிலாளர் கொள்கை பற்றி நியமிக்கப்பட்ட கமிட்டியின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன இவற்றில் தொழிலாளருக்கு வேலைகள், தொழிலாளர்கள் பயிற்சிக்கு எடுக்கப்படுவது சமபளக் கொள்கை, வீட்டு நிலைமைகள், சமூக வேலைகள் ஒற்றுமை முதலிய சகலதும் அடங்கியுள்ளன.

தொழிலாளர் பொருளாதார அபிவிருத்திக்குச் சம்பந்தமான 27 விஷயங்கள் கொண்ட தீர்மானங்கள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டன ஆசிய நாடுகளின் பொருளாதாரக் கொள்கைக்கு முக்கியமாக முதலில் விவசாய கைத்தொழில் வளர்ச்சி முக்கியமென்றும், இதனை அடைவதற்கு தளபாடங்கள், நிதி, நிபுணர்கள் உதவி முதலியவற்றை பெறுவதற்கு சர்வதேச நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் தனிப்பட்டவர்கள் முயற்சிகள் ஊக்கப்படுத்தப்படவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஜப்பானின் கைத்தொழில் அபிவிருத்தி பற்றிய தீர்மானமும் பொருளாதார நெருக்கடி பற்றியும் மகாநாட்டில் பேசப்பட்டது. (ராய்ட்டர்)

ஒன்றரைக் கோடி மக்கள் கொலை

2-வது மகா யுத்தத்தில் மாண்டவர்கள்

நியூயார்க், நவ 8

இரண்டாவது மகா யுத்தத்தில் மொத்தம் ஒருகோடி 50 லட்சம் போர்வீரர்கள் மரித்திருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இக்கணக்கை அமெரிக்க குடியேற்ற நாட்டு மந்திரி திரு மார்ஷல் வெளியிடுள்ளார். சில முக்கிய தேசங்களும் அவற்றின் மரணத் தொகைகளும் பின்வருமாறு:-

ரஷியா	7,500,000
ஜெர்மனி	2,850 000
சீனா	2,200,00
ஜப்பான்	1,506 000
இங்கிலாந்து	305,700
சாம்ராஜ்ய நாடுகள்	1,046,800
அமெரிக்கா	2 095 904

மேல் குறிக்கப்பட்ட கணக்கில் பல லட்சக்கணக்கில் மாண்ட பொதுமக்கள் சேர்க்கப்படவில்லை மேற்கண்ட விபரங்கள் "என்சைக்ளோப்பீடியா பிரிட்டானிக்கா" என்னும் கலைக் களஞ்சியத்தில் சேர்ப்பதற்காக எழுதப்பட்ட கட்டுரையில் காணப்படுகிறது.

கோட்டாஞ்சேனையில் கொலை

கொழும்பு, நவ. 8

கொட்டாஞ்சேனையில் கலேஜ் வீதியில வசிக்கும் திரு ஜி. எப். டி. செனவிரத்தினா என்னும் (வயது 55) முனிஸ்பல சபை மாஜி உத்தியோகத்தர் ஒருவர் நேற்று இனந்தெரியாத ஒருவரால் கொலை செய்யப்பட்டாரென்று கூறப்படுகிறது. கழுத்தில் குத்தப்பட்ட கத்திக் காயங்களில இரத்த ரத்தப் பெருக்கு ஏற்பட்டதால் மரணம் நேரிட்டதென்று மரண விசாரணையினபோது கூறப்பட்டது. போலிஸார் புலன் விசாரணை செய்கின்றனர்.

சங்கக் கடை மாஜி மானேஜர் மீது குற்றச்சாட்டு

ரூ. 2500 பிணையில் விடப்பட்டார்

யாழ்ப்பாணம், நவ 8

யாழ்ப்பாண முஸலிம் சங்கக் கடையின் மாஜி மானேஜர் திரு என் எம். முகம்மது எனபவர் அக்கடைகளுக் சொந்தமான ரொக்கம், பால்டின்கள், ஜவுளி வகைகள் முதலியன சம்பந்தமாக மோசடி செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டது. இப்பொருளகள் சுமார் ரூ 5000 மதிப்புள்ளவையென்று தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாண மாஜிஸ்டிரேட் முன் இவ் வழக்கு எடுக்கப்பட்டபோது எதிரி தாம் குற்றவாளியல்லவென்று கூறியதன் மேல் நீதிபதி எதிரியை ரூ 2500 பிணையில் போகுமாறு விடுகது வழக்கு விசாரணையை 19-ம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

விவசாயி கத்தியால் குத்திக் கொலை

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ்ப்பாண நகரிலிருந்து சுமார் 40 மைல் தூரத்திலுள்ள கண்டாவளை எனனுமிடத்தில் ஹதாரி என்னும வயலில் சின்னத்தம்பி சின்னப்பு என்பவர் கத்திக் காயத்துடன் இறந்து கிடந்தது கண்டு பிடிகப்பட்டது. பிரதாப இடத்தில் அம்பலவாணர் செல்லையா என்பவருக்கும் காலஞ்சென்றவருக்கும் இடையில் சச்சரவு ஏற்பட்டதாகவும் அப்பொழுது செல்லையா என்பவர் ஒரு கிரிஸ் கத்தியால் இவருடைய முதுகில் குத்தி விட்டதாகவும கூறப்படுகிறது. எதிரி தலை மறைவாகத் திரிவதாகவும் போலிசார் நடவடிக்கை எடுத்துள்ளன ரென்றும் கூறப்படுகிறது.

ரஷியாவை மிரட்டவேண்டும்

பழைய பிரிட்டிஷ் ராணுவத் தலைவரின் நவீன யோசனை

புலவாயோ, நவ. 7

ரஷியாவோடு பிரிட்டனும் அமெரிக்காவும் கடினமாக நடந்துகொள்ள வேண்டும் என்று முன்னர் மாஸகோவில் இருந்த பிரிட்டிஷ் ராணுவ மிஷன் தலைவரான ஸர். கிப்பார்ட் மார்ட்டெல் குறிப்பிட்டார் அவர் மேலும் கூறியதாவது:-

வெற்றி கொள்ளப்பட்ட ஐரோப்பிய தேசங்களில் இருந்து 'வெளியேறு- அல்லது அணுக்குண்டை வீசி விடுவோம்' என்று மிரட்டிவிட்டால் ரஷியா எவ்வித வம்புமில்லாமல் பின் வாங்கிவிடும். அப்படிப்பட்ட கொள்கையை நாம் அனுசரித்தால் ரஷியா "பயல்களுக்குப் புத்தி தெளிவேற்பட்டுவிட்டது" என்று தெரிந்து கொள்ளும். ரஷியர்களுக்கு இத்தகைய பாஷைதான் நன்றாக விளங்கும். அததுடன் யுத்தத்தைக் கிளப்ப யாரும் இனி விரும்பமபட்டார்கள்.

58வயது நிறைந்த இவர் ராணுவகடமைகளில் இருந்து 1944-ல் விலகிவிட்டார்.

சங்கக் கடை காரியதரிசிக்கு 6 மாத சிறை

யாழ்ப்பாணம், நவ. 8

வண்ணார்பண்ணை சங்கக் கடையின் காரியதரிசி திரு. கே. சாந்தலிங்கம் என்பவர் களவாடப்பட்ட ஜவுளிகளை வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் யாழ்ப்பாண மாஜிஸ்டிரேட் எதிரிக்கு 6 மாத சிறைத் தண்டனை விதித்தார்



கலகா தொகுதி பிரதிநிதிக்கு வரவேற்பு

கொழும்பு, நவ 8

கலகா தொகுதி பாராளுமன்ற பிரதிநிதி திரு. டி. பி பாணபொக்கேஉதுநுவராவிலே வரவேற்கப்பட்டார். லங்கா திலகா பாடசாலைக்கு ஊர் வலமாக அழைத்துச் செல்லப்பட்டு அங்கு ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. கிராம வாசிகளுக்கு கல்வியும் விவசாயமும் அவசியம் என்பதைப் பற்றி பேசுகையில் இவர் குறிப்பிட்டார்.

தமிழ் விருத்திப் போட்டி நிர். 7.

பரிசு 2000-00 ரூ.

குறைந்த முயற்சி! நிறைந்த பரிசு!!

சிறந்த தமிழ் நடை!!!

முடிவு தேதி 14-11-47

கூப்பன்கள் வேண்டியோர் எழுதுக.

இலவசமாய் அனுப்பி வைக்கப்படும்.

இளங்கோவன் பதிப்பகம்,

123, நோரிஸ் ரோட்,

கொழும்பு.

நமது ஜோஸியப் பகுதி:

சிங்க செவ்வாயின் பலன்

[சுகன்யா எழுதுவது]

யக்தகாரகன் செவ்வாய் 1947-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம்தேதி தொடக்கம் 1948-ம் ஆண்டுமார்ச்சுமாதம் 1-ம்தேதி வரைக்கும் சிங்க ராசியில் சஞ்சரிப்பார் சிங்கம் சூரியனின் வீடாதலாலும், சிங்கம் செவ்வாய் காலத்தில் ஜனநாயகத்தைக்காப்பாற்றுவதற்கும், ஜனநாயகத்தின் ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கும் உலகமெங்கும் பல கிளர்ச்சிகள் தோன்றி மறையும்.

சிங்கம் பிரான்சினதும், பல ஐரோப்பிய நாடுகளினதும் உதயராசி பிரான்சின் உதய ராசியில் செவ்வாயிருப்பதால் சிங்க செவ்வாய் காலததில் பிரான்சில் ஜனநாயகக் கட்சி பலமடையும் ஜனநாயகக் கட்சியை ஆதரிக்க பல பெரியார்கள் முன்வருவார்கள். பிரான்சின் மந்திரி சபையில் ஐனாயப்பிரகாரமான கிளர்ச்சிகளும், மாற்றங்களு முண்டாகும், பொதுவுடமைக் கட்சியின் தலைவர்கள் பிரான்சில் புரட்சியை உண்டுபடுத்த எத்னிப்பார்கள் சிங்க செவ்வாய் காலத்தில் பிரான்சில் டலதொல்லைகளும், யுத்தம்போன்ற பீதிகளும்,கொள்ளைநோய்களும் பரவுதலுண்டாம்.

சிங்கம் ரஷியாவின் அயல் நாட்டு ஸ்தானமாதலால் சிங்க செவ்வாய் காலத்தில் ரஷியாவுக்கும் அயல்நாடுகளுக்கும் பகைகளதிகரிக்கும். யுத்தம் போன்ற தொல்லைகள் அயல் நாடுகளுடனுண்டாகும ரஷியாவுக்கும் ஜனநாயக நாடுகளுக்கு மிடையில அதிக பகைகளும், பிரிவினைகளும், நம்பிக்கையின்மைகளுமதிகரிக்கும்.

சிங்க செவ்வாய் காலத்தில் மத்திய கிழக்கு நாடுகளில் தொல்லைகள் நீடிக்கும். அமெரிக்காவிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும், பூமி அதிர்ச்சிகளினாலும் கொள்ளை நோய்களினாலும ஜீவமோசங்களுண்டாகும். மத்திய கிழக்கு நாடுகளில் சில புரட்சிகள் தோன்றியறையும்.

கிழக்கு நாடுகளுக்கும் சிங்க செவ்வாயின்பலன தீங்கானது இடையிடையே வகுப்புவாதக் கட்சிகளின் தொல்லைகளும்,பல உயிர்ச்சேதங்களும், அந்நியரின் தொல்லைகள் அதிகாத்தலும், உள்நாட்டுப் புரட்சிகள் தோன்றி மறைதலும், பஞ்சப் பிணியுமுண்டாம்.

இவ்வார தினப்பலன்

ஞாயிறு நவம்பர் 9 இன்று உதயம் விவாகம் செய்வதற்கும், கொண்டாட்டங்களுக்கும், இனஜனபந்துக் கூட்டங்களுக்கும் விசேஷ நாள்.

சந்திர லக்னம்-மேடம், கடகம், கன்னி, விருச்சிகம், தனுசு மீன ராசிகளில் பிறந்தவர்களுக்கு இததினத்தில் உததம பலனுண்டாம்.

திங்கள் நவம்பர் 10 இன்று பொதுக் கருமங்கள் ஆரம்பிபதற்கும் வியாபாரததிற்கு கொள்ளல் விற்றலுக்கு பொது நாள்.

சந்திர லக்னம், மேடம், கடகம், கன்னி, விருச்சிகம், தனுசு மீன ராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் பணம் பேறுண்டாம்.

செவ்வாய் நவம்பர் 11 தீபாவளிப் பண்டிகை. இன்று புதுக் கருமங்கள் ஆரமபிப்பதற்கு தோஷ நாள்.

சந்திர லக்னம், மேடம், இடபம், சிங்கம், துலாம், தனுசு மகர ராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் சுகமுண்டாம்.

புதன் நவம்பர் 12 அமாவசை. இன்று எல்லாக் கருமங்களும் ஆரமபிப்பதற்கு தோஷ நாள் இததினத்தில் நீரில் கவனமாயிருத்தல் வேண்டும்.

சந்திர லக்னம், மேடம், இடபம்,சிங்கம, துலாம், தனுசு, மகர ராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் நற்பலனுண்டாம்

வியாழன் நவம்பர் 13 ஸ்கந்த ஷஷ்டி பூஜாரம்பம இததினத்தில் மர வகை, செடி வகை நடுதல், பிரயாணம் செய்தல், புதுக் கணக்குப் பதிதல், கொள்ளல், விற்றல முதலியன வற்றிற்கு உததம தினம.

சந்திர லக்னம், இடபம், மிதுனம், கன்னி, விருச்சிகம், மகரம், கும்பராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினததில் வெற்றிகளுண்டாம்.

வெள்ளி நவம்பர் 14 இன்று புதுக்கருமங்கள் ஆரமபிப்பதற்கு தோஷ தினம்.

சந்திர லக்னம், இடபம், மிதுனம், கன்னி, விருச்சிகம், மகரம், கும்ப ராசிகளில் பிறந்தவர்களுக்கு இததினத்தில் முன்னேற்றமுண்டாம்.

சனி நவம்பர் 15 இன்று கொண்டாட்டங்களுக்கு பொதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும் பொது நாள்.

சந்திர லக்னம், இடபம், மிதுனம், கன்னி, விருச்சிகம், மகரம், கும்ப ராசிகளில் பிறந்தவர்களுக்கு இததினததில் ஜெயமுண்டாம்.

கிரவுன் தியேட்டர், மருதானை. வெற்றிகரமாக 3-வதுவாரம்

தினசரி மாலை 6-15 இரவு 9-30 மணிக்கும்

இன்று காலை 10 மணிக்கும் பகல் 3 மணிக்கும் டெட்னி காக்ஸி

சுவர்ண லதா

நஸீர்

இன்மாயில்

நிறம்பட படிக்கும்

புத்தப் புதிய படம்!

காதிற் கினிய பாடல்கள்!

மனதை கவரும் ஆடல்கள்!

"காதல் வீரம் சோகம்"

இன்னும் ஒவ்வொரு வரும் விரும்பும் அத்தனை அம்சங்களும் கொண்டது

"வாமிக் அஷ்ரா" என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காண்பிக்கப்படும்

சனி-ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும், பால்கனிக்கும், 1-ம் வகுப்புக்கும் அரை சார்ஜ்

மதருஸில 24 வாரங்கள் வெற்றிகரமாக ஒரே தியேட்டரில் காட்சியளித்த பாங்கான காதல் திரை ஓவியம் இன்று உங்களுக்குக் காட்சியளிக்கின்றது!

இடத்துக்கு முந்துங்கள்!

டெலிபோன்: 51, 3866

பிடிச் சக்கரவர்த்தி.

த.பி. செரக்கலால் ராம்சேட் பீடி

2 பீடிரிங்லேயில்

சிலோன் நியூஸ் பேப்பர் லிமிடெட்டிற்காக, 1947-ம் வருஷம் நவம்பர் மாதம் 9-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, ட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org